DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.40/2017

**prosecution witness: LW-11 as PW-10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பெரியசாமி | பதவி | : | காவல் உதவி ஆணையர் மத்திய குற்றப்பிரிவு திருப்பூர் |
| த/பெ. | : | பழனி கவுண்டர் | வயது | : | 59 |
| ஊர் | : | திருப்பூர் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>25.11.2025</u>

( எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**<u>முதல் விசாரணை:-</u>**

1) நான் தற்சமயம் திருப்பூர் மாநகரத்தில் மத்திய குற்றப்பிரிவு காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.11.2016 அன்று மண்டபம் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது கூடுதல் பொறுப்பாக தங்கச்சிமடம் காவல் ஆய்வாளராக இருந்தபோது தங்கச்சிமடம் காவல் நிலையக் குற்ற எண் 124/2016 சட்டப்பிரிவுகள் 279, 304 ஏ இதச வழக்கில் முதல் தகவல் அறிக்கை உதவி ஆய்வாளர் கதிர்காமு என்பவரால் பதிவு செய்யப்பட்டு எனது விசாரணைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பை பெற்று 01.12.2016 ம் தேதி காலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பிளம்மிங், ரைமண்ட் ஆகியோர்கள் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன். (**பார்வை மகஜர் மற்றும் வரைபடம் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பட்டியல் சாட்சிகள் ஜேம்ஸ் நிரஞ்சன், ஆண்டனி பெனடிக், ஜேம்ஸ் ஆனலின், பிளமிங் ரைமண்ட் ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2) அன்றைய தினமே காலை 8.00 மணிக்கு இந்த வழக்கில் இறந்துபோன ஆரோக்கியசாமி என்பவரது பிரேதத்தை இராமேஸ்வரம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். (**மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

3) பின்பு பிரேத விசாரணையை முடித்து வழக்கில் உண்மையை அறியும் பொருட்டு தலைமைக் காவலர் 886 ஜேம்ஸ் கிளிண்டஸ் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு இறந்தவரின் பிரேதத்தை உட்படுத்தி அரசு மருத்துவர் திருமதி.

மோகனகண்மணி என்பவர் அளித்த பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்றேன்.

4) பின்பு தனி அலுவலில் சென்ற ஆய்வாளர் ராஜேஷ்கண்ணா என்பவர் பணிக்கு திரும்பியதால் வழக்கு கோப்பினை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு புலன்விசாரணையை தொடர்ந்தார். மேற்படி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணா என்பவர் என்னுடன் காவல் நிலையத்தில் பணிபுரிந்த காரணத்தினாலும் அவரது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் வழக்கு கோப்பை பார்த்து அவருக்காகவும் சாட்சிகள் ஜேம்ஸ் நிரஞ்சன், ஆண்டனி இன்னசன்ட், பெனடிக், ஜேம்ஸ் ஆனலின் ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பெற்றுள்ளார். பின்பு இந்த வழக்கில் எதிரி விக்னேஷ் என்பவரை 05.12.2016ம் தேதி தங்கச்சிமடம் தர்ஹாவில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்துள்ளார்.

5) 12.12.2016ம் தேதி எதிரி ஓட்டி வந்த வாகனமான டாடா ஏசிஇ TN 65 H 8410 என்ற வாகனத்தை 24.01.2017ம் தேதி அன்று இறந்துபோன ஆரோக்கியசாமி ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனமான TN 65 S 2639 TVS Sport என்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.விஸ்வனாதன் என்பவரது ஆய்வுக்கு உட்படுத்தி அவரிடமிருந்து மேற்படி இரு வாகனங்களுக்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்றுள்ளார். (**மேற்படி டாடா ஏசிஇ TN 65 H 8410 மற்றும் இருசக்கர வாகனமான TN 65 S 2639 TVS Sport ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6) பின்பு 13.02.2017ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.விஸ்வநாதன் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திருமதி.மோகனகண்மணி, பிரேத விசாரணைக்கு பிரேதத்தை ஆஜர் செய்த தலைமைக்காவலர் ஜேம்ஸ் கிளிண்டஸ், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் கதிர்காமு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

7) பின்பு இந்த வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரி விக்னேஷ் மீது இதச பிரிவு 279, 304ஏ-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>

டாடா ஏசிஇ மினி வேன் என்பது வேறு சரக்கு ஆட்டோ என்பது வேறு என்றால் சரிதான். இறந்துபோன ஆரோக்கியசாமி ஓட்டி வந்த இருசக்கர வாகனம் TN 65 S 2639 என்றால் சரிதான். ஆனால் இறந்தவர் தவறாக எழுதியுள்ளார். TN 65 S 2639 என்ற வாகனம் யாருடையது என்று தனது விசாரணையில்

தெரிந்துகொள்ளவில்லையா என்றால் சரிதான். புகார் மனுவானது 3வது அரசு சாட்சியின் தம்பி புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.2 தங்கள் விசாரணையில் விபத்து நடக்கும்போது இறந்தவரின் மகன் உடன் இருந்ததாக கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். குற்ற இறுதி அறிக்கையில் விபத்து ஏற்படுத்திய வாகனம் டாடா ஏசிஇ மினி வேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சிகளை நேரடியாக விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கின் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH
Date: 2025.11.25 10:27:58 +0530